பிரதி ஞாயிறுதோறும் எதிரொலி Ethiroli வெளிவராது

10/=

பக்கங்கள் 04

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 12 சனிக்கிழமை மே 13 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## நேபாள ஜனாதிபதி வந்தார்



சர்வதேச வெசாக் தினத்தின் நிறைவு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேபாள நாட்டின் ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி இன்று முற்பகல் 10.30 மணியளவில் கட்டுநாயக்க விமானத் தளத்தை வந்தடைந்தார்.

## 'யாழ்ப்பாணம் போகாதீர்'

### இளையராஜா வீடு முற்றுகை



வரும் ஜூலை மாதம் யாழிலும், கொழும்பிலும் இளையராஜாவின் இசை நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 11 மணியளவில் சென்னையில் உள்ள இளையராஜாவின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பான சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுவருகின்றன. (உ)

# அமைச்சரவையை மாற்றியே தீருவேன்

## மைத்திரி விடாப்பிடி



"யார் எதிர்த்தாலும் அமைச்சரவை மாற்றம்" நிச்சயமாக நடைபெறும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அமைச்சரவை மாற்றத்திற்கு எதிராக ஐ.தே.க அமைச்சர்கள் சிலர் போர்க்கொடி துக்கியிருக்கும் நிலையில் அமைச்சரவையில் மாற்றம் செய்வதற்கு பிரதமரும் இணக்கத்தை வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நாட்டின் நலனுக்காகவே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, முக்கிய அமைச்சுப் பதவியொன்றில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று சுட்டிக் காட்டியுள்ளது.

அமைச்சரவையில் மாற்றம் செய்யுமாறு பல்வேறு தரப்பினர் ஜனாதிபதியைச் சந்தித்து தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (எ)

## சிப்பாய்க்கு மரண தண்டனை

சிப்பாய் ஒருவருக்கு அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தினால் நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடமைக்காக வழங்கப்பட்ட ரி56 ரகதுப்பாக்கியை பயன்படுத்தி நபர் ஒருவரை கொலை செய்த குற்றத்துக்காகவே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி, அனுராதபுரம் ஹொரவ பொத்தான, கப்பு கொல்லாவையில் இந்தக் கொலை சம்பவம் இடம் பெற்றுள்ளது.



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல் சுடர் வல்வைப் படுகொலைகள் நினைவாக பொலிகண்டி பகுதியில் இன்று காலை ஏற்றப்பட்டது. (எ)

### தமிழர்களின் நலன் காக்க

## இலங்கைக்கு அழுத்தம்



தமிழர்களின் நலன்களைக் காக்க,இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக, அ.தி.மு.க நாடாளுமன்ற குழுத் தலைவர் டொக்டர் வேணுகோபாவுக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது முதல், இந்தியாவின் கவனம் அங்குள்ள தமிழர்கள் நலன் மீதே உள்ளது.

தமிழர்களின் நலன் களை பாது காக்க, சர்வதேச சமூகத்துக்கு அளித்துள்ள உறுதிமொழியை, இரு தரப்பு பேச்சுவார்த்தையின் போது, இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி அழுத்தம் கொடுத்து வருகிறது." என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### கைக்குண்டு

## வீச்சு

மருதானையிலுள்ள இலங்கை மருத்துவ சபை வளாகத்துக்கு வீசப்பட்ட, கைக்குண் டொன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட் டுள்ளது.

இனந்தெரியாத ஒருவர் நேற்றிரவு 10.30 மணியளவில் இந்த கைக்குண்டை மருத்துவ சபையை நோக்கி வீசியிருக்கலாம் எனவும், ஆயினும், அந்தக் குண்டு வெடித்திருக்க வில்லை யெனவும் மருத்துவ சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சந்நிதி ஆலயத்தில் மயங்கி வீழ்ந்தவர்

# சாவு



யாழ்ப்பாணத்தின் பிரபல சமயச் சொற்பொழிவாளர் சந்நிதி ஆலயத்தில் திடீரென மயங்கி விழுந்து இரு நாள்களின் பின் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பன்னாலையைச் சேர்ந்த நித்திய தசீதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 11 ஆம் திகதி சந்நியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் பங்கேற்றிருந்தார். அப்போது அவர் திடீரென வாந்தி எடுத்தார். தொடர்ச்சியான வாந்தியின் பின் மயங்கி வீழ்ந்த அவர், உடனடியாகவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சுயநினைவிழந்த நிலையில் அவர் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி இன்று காலை 6.45 க்கு அவர்உயிரிழந்தார்.

சமயச் சொற்பொழிவாளரும், இந்து நாகரீக ஆசானுமான நித்திய தசீதரனின் இறுதிக்கிரியை பன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

### வேலைநிறுத்தம்

## ஒத்திவைப்பு

நாளை மறுதினம் 15 ஆம் திகதி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்னெடுக்கப்படவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளதாக, சங்கத்தின் தலைவர் டொக்டர் நலிந்த ஹேராத் தெரிவித்துள்ளார்.

எதிரொலி Ethiroli

விரைவில் அதிக பக்கங்களுடன் உங்கள் கைகளில்..

### மயானங்களை அகற்றுக!

## யாழில் போராட்டம்



மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றக்கோரி சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்னால் இன்று முற்பகல் 10 மணிக்கு குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

# வித்தியா கொலை: 2 வருடங்களில் நடந்தது என்ன?



**2015 மே 13**

காலை பாட சாலைக்கு சென்ற மாணவி வித்தியா மாலை வரை வீடு திரும்பவில்லை. இரவிரவாக உறவினர்கள் மாணவியை தேடினார்கள்.

**2015 மே 14**

காலையிலும் வித்தியாவின் சகோதரன் , வித்தியா வளர்த்த நாய் மற்றும் ஊரவர்கள் தேடுகின்றார்கள்.
வித்தியா பாடசாலை செல் லும் பாதையில் உள்ள பாழடைந்த வீடொன்றின் பின் புறமாக கைகள் கால்கள் கட்டப்பட்டு வாய்க்குள் துணி அடையப்பட்ட நிலையில் வித்தியா சடலமாக மீட்கப்படுகின்றாள்.

● மதியம். புங்குடுதீவில் உள்ள 9 பாட சாலைகளையும் சேர்ந்த அதிபர் கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை அதிகாரிகள், பிரதேச சபை மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் வர்த்தகர் கள், பொதுமக்கள் என பலதரப் பட்டவர்களும் புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் கூடி ஆர்ப்பாட்டம்.

● 9ஆம் வட் டாரத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் இந்திரகுமார் (வயது 40), பூபால சிங்கம் ஜெயக்குமார் (வயது - 34), பூபாலசிங்கம் தவக் குமார் (வயது 32) ஆகிய மூவரும் கைது.

**2015 மே 15**

வாய்க்குள் துணி அடைந்தமையால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, தலை கல்லில் அடிபட்டதில் மூளையில் இரத் தக் கசிவு ஏற்பட்டு மாணவி வித்தியா உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனைகளில் தெரி விக்கப்பட்டது கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட் டமை உறுதி செய்யப்பட்டது. வித்தியாவின் உடற்பாகம் பரி சோதனைக்காக கொழும் புக்குஅனுப்பி வைக்கப்பட்டது.
● வித்தியாவின் இறுதிக்கிரியை . புங்குடுதீவில் கடையடைப்பு . தீவகத்திற்கான போக்குவரத்தும் இடைநிறுத்தம்.

**2015 மே 17**

வித்தியா கொலை தொடர்பில் மேலும் 5 பேர் கைது. சந்தேக நபர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, குறிகட்டுவான் பகுதியில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் காவலரணை முற்றுகையிட்டு மக்கள் இரவிரவாகப் போராட்டம். சில மணி நேரத்தில் சந்தேகநபர்களை பொலிஸார் கடற்படையின் உதவி



யுடன் யாழ்ப்பாணத்திற்கு கடல் வழியாக கொண்டு சென்றனர். மக்கள் ஆத்திரமுற்று காவலரணை தாக்கினார்கள்.
கைது செய்யப்பட்ட 5 சந் தேகநபர்களுடன் தொடர்புடை யவர் என சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை பிடித்து மின் கம்பத்தில் கட்டி வைத்து மக்கள் தாக்கினார்கள்.
அவ்விடத்திற்கு சென்ற தற்போதைய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் குறித்த நபரை பொலிஸா ரிடம் ஒப்படைக்குமாறு அங்கிருந்தவர்களிடம் கூறியதை அடுத்து அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

**2015 மே 18**

கைதான 05 சந்தேகநபர்களையும் மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது பொது மக்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டு அவர்களைத் தாக்கினார்கள்.

**2015 மே 19**

சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் எனும் நபர் ஒன்ப தாவது சந்தேக நபராக கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து கைது. (குறித்த நபர் பொது மக் களால் பிடிக்கப்பட்டு யாழ்ப் பாண பொலிஸில் 17 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டு, யாழ்ப் பாண பொலிஸாரால் விடுவிக்கப்பட்ட பின்னர் 19 ஆம் திகதி வெள்ளவத்தையில் மீண் டும் கைது செய்யப்பட்டார்)
மாலை. புங்குடுதீவுக்கு சென்ற சட்டத்தரணியும் கொழும்பு பல்கலைகழக சட்டத்துறை விரிவுரையாளருமான வி.ரி.தமிழ்மாறனே, சுவிஸ் குமார் தப்பி செல்ல உதவினார் எனக் கூறி ஊரவர்கள், அவரை சுமார் 5 மணித்தியாலங் களுக்கு மேலாக பொலிஸ் வாக னத்திற்குள் முடக்கினர். பின்னர் கடற்படையின் உதவியுடன் பொலிஸார் தமிழ்மாறனை ஊரவர்களிடம் இருந்து பாதுகாப்பாக மீட்டனர்.

**2015 மே 20**

மாணவிக்கு நீதி கோரி ஹர்த்தால். அன்றைய தினம் சந்தேகநபர்களை யாழ்.நீதி வான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை.நீதி மன்ற கட்டட தொகுதியைச் சுற்றி பெருமளவான மக்கள் கூடி நின் றனர். மதியம் 11. 30 மணி. மக்கள் திடீரென வன்முறையில் இறங்கினர். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கல் வீசி தாக்குதல். சட்டத்தரணிகளின் வாகனங்கள் , சிறைச்சாலை வாகனம் மற்றும் அங்கிருந்த ஏனைய வாகனங்கள் மீதும் தாக்குதல்.
கலகம் அடக்கும் பொலிஸார் கண்ணீர் குண்டு வீசி போராட்டகாரர்களை துரத்தினர்.
வன்முறையில் ஈடுபட்டனர் எனக்கூறி 132 பேர் கைது செய்யப்பட்டனர்.
● மாணவியின் குடும்பத்தின் சார்பில் இலவச மாக முன்னிலையாவோம் என்றும், சந்தேக நபர்கள் சார் பில் முன்னிலையாக மாட்டோம் எனவும் யாழ். சட்டத்தரணிகள் கூட்டாக அறிவிப்பு.

தொகுப்பு: மயூரப்பிரியன்

**2015 மே 26**

வித்தியாவின் தாய், சகோதரனை சந்தித்து ஜனாதிபதி ஆறுதல். "விசேட நீதிமன் றம் மூலம் விரைவான விசா ரணை, வித்தியா குடும்பத்துக்கு வீடு" என்னும் வாக்குறுதிகளை வழங்கினார்.( இன்னும் விசாரணை முடியவில்லை.வீடும் ஒன் றரை வருடங்களின் பின்னர் வவுனியா இராணுவக் குடியிருப் பில் வழங்கப்பட்டது)

**2015 டிச 15**

பத்தாவது சந்தேகநபராக ஜெயவர்த்தன ராஜ்குமார் (வயது-26) எனும் நபரை ஊர்காவற்துறை பொலிஸார் ஊர் காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள்.குறித்த சந் தேகநபர் பஸ்ஸில் தப்பி செல்ல முற்படுகையில் பஸ்ஸினை துரத்தி சென்று அராலி சந்தியில் வைத்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

**2016 ஜன 25**

மகளின் கிரியைகளை செய்வதற்காக வழக்கினை துரிகதியில் முன்னெடுக்குமாறு புங்குடுதீவு மாணவியின் தாயார் சட்டத்தரணி ஊடாக நீதி மன்றில் கோரிக்கை.உடல் புதைக்கப்பட்டதனால் இந்து சமய முறைப்படியான கிரியைகளை முன்னெடுக்க முடியவில்லை எனத் தெரிவித்தார்.
● "விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றவாளிகள் என இனம் கண்டால் எம்மை தூக்கிலிடுங்கள்" என புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் சந் தேகநபர்கள் கூட்டாகக் கோரிக்கை.

**2016 பெப். 19**

குற்றப் புலனாய்வு துறையினரால் மர பணு சோதனை அறிக்கை உட்பட எந்த அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கவில்லை.
அறிக்கைகளை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என கடும் தொனியில் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் உத்தரவு



(வழக்கு தொடர்பான சான்றுப் பொருட் களின் அறிக்கைகள், டீ.என்.ஏ பரிசோதனை அறிக்கைகள் என 12 அறிக்கைகளில் எவையும் எட்டு மாதத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை)

**2016 மார்ச் 04**

வித்தியாவின் கொலைக்கான காரணத்தை குற்றப்புலனாய்வு துறையினர் ஊர்காவற்துறை நீதிமன்றில் வெளியிட்டனர்.
"வித்தியாவை புங்குடுதீவை சேர்ந்த சிவதேவன் துஷாந்த் ஒரு தலையாக காதலித்தார். ஆனால் வித்தியா சம்மதிக்கவில்லை. வித்தியாவைப் பழிவாங்க, தன் நண்பரான தில்லைநாதன் சந்திரஹாசனுடன் கூட்டு சேர்ந்து மாணவியை கடத்த திட்டமிட்டார். திட்டத்தின் சூத்திரதாரியாக மாறினார் சுவிஸ் குமார்.இன்னும் இருவர் துணைக்கு சேர்க்கப்பட்டனர்.அப்படிச் சேர்க்கப்பட்டவர்களுக்கும் வித்தியா குடும்பத்துக்கும் முன்பகை இருந்தது. அவர்களுக்கு எதிராக களவு வழக்கில் வித்தியாவின் தாயார் சாட்சி சொல்லி இருந்தார்.திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. வித்தியா கடத்தப்பட்டு கோரமாக கூட்டு வன்புணர்வின் பின் கொல்லப்பட்டார்.துசாந்த், சந்திரஹாசன் ஆகிய இருவருமே கொலை செய்தவர்கள்" -இதுவே குற்றப்புலனாய்வாளர்களின் அறிக்கை.

**2016 மார்ச் 03**

11ஆவது சந்தேகநபரான உதயசூரியன் சுரேஷ்கரன் கைது.

**2016 மார்ச் 18**

வழக்கு ஒரு சில மாதங்களில் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்படும் என ஊர்காவற்துறை நீதிமன்று அறிவிப்பு.
● புங்குடுதீவு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் காணப்படும் பாழடைந்த வீடுகள் பற்றைகளை அழிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவு.

**2016 ஏப். 01**

பன்னிரண்டாவது சந்தேகநபராக தர்மலிங்கம் ரவீந்திரன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

**2016 ஏப். 20**

மரபணு பரிசோதனை அறிக்கையை தம்மி டம் ஜின்ரேக் நிறுவனம் இது வரை கையளிக்கவில்லை என பொலிஸார் மன்றில் தெரிவிப்பு. ஜின்ரேக் நிறுவன அதிகாரியை நீதிமன்றில் முன்னிலை ஆகுமாறு உத்தரவு.



●பொது மக்களால் பிடித்து பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்ட சுவிஸ் குமார், எவ்வாறு பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பி சென்றார் என்பது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவு.

**2016 மே. 04**

வித்தியா கொலை வழக்கின் மரபணு பரிசோதனை அறிக்கை தாமதமாக கராணம் பணம் செலுத்தப்படாமையே என ஜின்டேக் நிறுவனம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு.
● ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு வெளியில் வைத்து சுவிஸ் குமாரின் தாய் மற்றும் துஷாந்தனின் தாய் ஆகிய இருவரும் தன்னை மிரட்டியதாக வித்தியாவின் தாய் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு.

**2016 மே. 09**

வித்தியா கொலை வழக்கின் ஒன்பதாவது சந்தேக நபரான சுவிஸ் குமாருடன் தொடர்புகளை பேணியவர்கள் , தப்பி செல்வதற்கு உதவியவர்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என குற்றப் புலனாய்வு பிரிவு பணிப்பாளருக்கு ஊர்காவற் துறை நீதவான் ஏ.எம்.எம். றியாழ் உத்தரவு.

**2016 மே. 17**

வித்தியாவின் தாயாரை மிரட்டிய இருவரிடமும் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றனர்.

**2016 மே. 18**

வித்தியா கொலை வழக்கின் மரபணு பரிசோதனை அறிக்கையை குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

**2016 ஜூலை 18**



வித்தியாவின் தாயை மிரட்டிய குற்றத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டு இருந்த சுவிஸ் குமாரின் தாயாரான மகாலிங்கம் தயாநிதி சிறைச்சாலையில் சுகவீனம் காரணமாக உயிரிழப்பு.
● வித்தியா கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு உள்ள சுவிஸ் குமாரும், அவரது தம்பி மகாலிங்கம் சசீந்திரனும் தாயாரின் இறுதி கிரியைகளில் கலந்துகொள்ள ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இ. சபேசன் அனுமதி.

**2016 ஜூலை 13**

வித்தியா கொலை வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தி உள்ளதாக குற்ற தடுப்பு புலனாய்வு பிரிவு பொலிசார் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் தெரிவிப்பு.

**2016 ஒக. 10**

வித்தியா கொலை வழக்கின் குற்ற தடுப்பு புலனாய்வு பிரிவின் விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டு உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி யாழ்.மேல் நீதிமன்றில் தெரிவிப்பு.

**2016 செப். 20**

வித்தியா கொலை வழக்கின் குற்றவாளிகள், இனம் காணப்பட கூடிய நிலையில் குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கை உள்ளதாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் மன்றில் தெரிவிப்பு.

**2016 நவ. 09**

வித்தியா கொலை வழக்கு தொடர்பில் மிக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய கோரி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சட்டமா அதிபருக்கு பணிப்புரை.

**2017 பெப். 02**

வித்தியா கொலை வழக்கின் விசாரணைகள் முடிவுறும் தருவாயில் உள்ளதாகவும் விரைவில் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்படும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவிப்பு.

**2017 பெப். 22**

வித்தியா கொலை வழக்கின் 11 ஆவது சந்தேக நபர் அரச தரப்பு சாட்சியமாக மாறுவதற்கு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் ஒப்புதல்.
● வித்தியா கொலை வழக்கு 98 சதவீத விசாரணைகள் முடிவடைந்து விட்டதாக ஊர்காவற்துறை நீதிவான் எம்.எம். றியாழ் தெரிவிப்பு.

**2017 ஏப். 28**

வித்தியா வழக்கின் 10 ஆவது சந்தேகநபரான ஜெயவர்த்தனா ராஜ்குமார் மற்றும் 12 ஆவது சந்தேகநபரான ரவீந்திரன் ஆகியோர் சாட்சியங்கள் இல்லாமையால் வழக்கில் இருந்து விடுதலை.

**2017 ஏப். 04**

வித்தியா கொலை வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பரிசீலனையில் உள்ளது. இறுதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது - என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவிப்பு.

**2017 மே 05**

வித்தியா கொலை வழக்கின் குற்ற பகிர்வு பத்திரம் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் மேல் நீதிமன்றில் தெரிவிப்பு.

**2017 மே 10**

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை கொழும்பில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் முன்னிலையில் 'ட்ரயல் அட் பார்' முறையில் நடத்த சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

**2017 மே 11**

வித்தியா கொலை வழக்கு யாழ்.மேல் நீதிமன்றிலையே நடைபெற வேண்டும் என கோரி மாணவியின் தாய் உட்பட புங்குடுதீவு மக்கள் போராட்டம்.

**2017 மே 12**

வித்தியா கொலை வழக்கு குற்றபகிர்வு பத்திர வழக்கேடுகள் யாழ். மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன. அதனை அடுத்து குறித்த வழக்கேடுகளை இரும்பு பெட்டகத்தில் வைத்து பாதுகாக்குமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பதிவாளருக்கு பணிப்புரை.

**2017 மே 13**

இன்று வித்தியா கொலையுண்டு இரண்டாம் ஆண்டு நினைவு தினம்.

எதிரொலி
Ethiroli

இலங்கை அரிசி மாவுக்கு
# சுவிஸில் தடை





இலங்கை அரிசி மாவுக்கு சுவிஸ் நாட்டு அரசு தடை விதித்துள்ளது. சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தமது உணவுத் தேவைக்காக 'ருசி' நிறுவனத்தின் வறுத்த அரிசிமாவையே அதிகம் பயன்படுத்தி வந்தனர். இந்த மா இலங்கையில் தயாரிக்கப்படுவதாக சொல்லப்பட்டது. ஆனால் குறித்த மாவை இலங்கையர் ஒருவர் இந்தியாவில் வைத்து தயாரித்தே ஏற்றுமதி செய்துள்ளார். அத்துடன் நாட்டரிசி மாவைப் போல் இருப்பதற்காக கோதுமாவில் தவிட்டைக் கலந்து பொதி செய்யப்பட்டே, இந்த மா விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. இதனை சுவிஸ் நாட்டு உணவுத்தரக் கட்டுப்பாட்டு பிரிவு கண்டுபிடித்து, தடை செய்துள்ளது.

நீர்மூழ்கி விவகாரம்
## சீனா மௌனம்

தமது நாட்டு நீர் மூழ்கிக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டதாக வெளியான செய்திகள் குறித்து சீனா மௌனம் காத்து வருகின்றது. சீன நீர்மூழ்கிக் கப்பல் இலங்கையில் தரித்து நிற்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது என ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தமை குறித்து சீன வெளிவிவகார அமைச்சிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த விடயம் குறித்து சீன பாது காப்பு அமைச்சிடமே மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ)

# அந்த நாள் ஞாபகம்.....!




**1765.05.13**

யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக அன்ரனி மூயார்ட் என்பவன் நியமிக்கப்பட்டான்.

வாகனத் திருடன்
## பிடிபட்டான்

வாகனங்களைக் களவாடி வந்த ஒருவர் பாணந்துறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். களுத்துறை மாவட்ட குற்றவிசாரணை பிரிவினரால் சந்தேகத்திற்கிடமாக வாகனம் ஒன்று பரிசோதிக்கப்பட்ட போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த 1.25 கிராம் ஹெரொயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

# மோடி பௌத்தத்தை இழிவுபடுத்திவிட்டார்

எல்லே குணவன்ச தேரர் குற்றச்சாட்டு




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பௌத்த மதத்தை இழிவுபடுத்தியுள்ளதாக தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். இலங்கை வந்த இந்திய பிரதமர் ஒரு இன சமூகத்தை மட்டும் இலக்குவைத்து உரையாற்றியுள்ளதாகவும் இது பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தியப் பிரதமர் மீதோ அல்லது இந்திய அரசாங்கம் மீதோ எவ்வித எதிர்ப்பும் கிடையாது என தெரிவித்துள்ள அவர், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# ராஜிதவை பதவி நீக்கக் கோரிக்கை

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவை பணி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை விடுத்துள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதாரத்துறை தொடர்பில் போதியளவு தெளிவுடைய ஒருவரை நாட்டின் சுகாதார அமைச்சராக நியமிக்க வேண்டுமென கோரியுள்ளனர்.
நாட்டின் சுகாதார சேவை ஆபத்தில் சிக்கியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் நடவடிக்கைகள் நோயாளிகளை ஆபத்தில் ஆழ்த்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (எ)

# எதிர்ப்பு

இலங்கை அரசால் வடக்கில் 6 ஆயிரம் பொருத்து வீடுகள் கட்டப்படுவதற்கு, முழு அளவில் எதிர்ப்பு வெளியிட வடமாகாண சபை தீர்மானித்துள்ளது. பொருத்து வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும் வடமாகாண சபை பொருத்துவீடுகளை நிராகரித்ததுடன் குறித்த ஒதுக்கீட்டினில் தற்போது இரண்டு நிரந்தர வீடுகளை அமைக்கமுடியுமெனவும் தெரிவித்துள்ளது.




## 'தாய்மனசு' பாடலுக்கு வரவேற்பு

அன்னையர் தினத்தை முன்னிட்டு புலம்பெயர் கலைஞர்களும் ஈழத்துக் கலைஞர்களும் இணைந்து "தாய்மனசு" என்ற பாடலை வெளி யிட்டுள்ளனர்.
'தாய்மனசு' பாடலை பாவலன் பகீர் எழுத, பிரியனின் இசையில் பிரசாத் பாடியுள்ளார். திரு ஸ்ரூடியோவின் படத் தொகுப்பில் வெளியாகியுள்ள இந்தப் பாடல், அன்னையரின் பெருமையையும் தியாகத்தையும் இசை மூலம் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளதால், பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மோடிக்கு
# பரிசு

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு அமைச்சர் கயந்த கருணாதிலக பரிசு ஒன்றை வழங்கியுள்ளார்.
இலங்கை விஜயத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கிய புகைப்படத் தொகுப்பினையே தனது பரிசாக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளித்தார்.

சிறுவர் விளையாட்டுப் பொருட்களால்
# புற்றுநோய்

தரப்படுத்தப்படாத நச்சுப் பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்களால் புற்றுநோய் உண்டாகும் அபாயம் ஏற்படுவதால் பெற்றோர் இது குறித்து அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே எச்சரிக்கை விடுத்துள்ளார். தற்போது வெளிநாடுகளில் இருந்து பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் விளையாட்டுப் பொருட்கள், எந்தவொரு தரக்கட்டுப்பாடும் அற்ற விதத்தில் இலங் கைக்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவ்வாறான விளையாட்டுப் பொருட்களால் புற்றுநோய் அபாயம் ஏற்படுவ தாகவும் அவர் தெரிவித் துள்ளார். (எ)

**வாசகர் கவனத்துக்கு...**

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவே அனுப்பிவைக்கலாம்.



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் நடைபவனி இன்று காலை 7மணியளவில் பாடசாலை மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்றது. நடைபவனியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (உ-11)

## நாளை நாளும் கோளும்

14.05.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 31ஆம் நாள்.

திருதியை மு.ப. 09.04 வரை | மூலம் பி.இ. 12.43வரை | அமிர்தசித்தயோகம்
இராகுகாலம் 04.23-05.53 | சுபநேரம் 08.53-10.23 | எமகண்டம் 11.53-01.23

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்வு | செலவு | போட்டி | நலம் | வெற்றி | ஊக்கம் | ஆதரவு | நட்பு | சுபம் | நிறைவு | நன்மை | ஆர்வம் |

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 13.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.